விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 2 முஹரம் 19 இதழ் 275
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-11-81

## கடத்தலை முறியடிக்க அதிவேக இயந்திரப்படகு

(கொழும்பு)

கடத்தலை முறியடிக்கும் அதிவேக இயந்திரப்படகொன்று இலங்கைத் துறைமுக அதிகார சபையினருக்குக் கிடைத்துள்ளது.

இலங்கை கடற்கரைகளில் அதிகரித்துவரும் கடத்தலை முறியடிக்க அதிவேக இயந்திரப்படகுகள் தேவைப்பட்டதைத் தொடர்ந்தே துறைமுக அதிகார சபையினர் இதனைப் பெற்றுள்ளனர்.

அதிவேக இயந்திரப்படகுகளை கண்காணிப்பில் ஈடுபடுத்துவதன் மூலம் கடத்தலை முழு அளவில் முறியடிக்கலாம் என்று துறைமுக அதிகார சபையினர் நம்புகின்றனர். இப்படகுகளை துறைமுக பாதுகாப்பு அதிகாரிகள் உபயோகிப்பார்கள்.

இப்படகின் வெள்ளோட்டத்தை வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஆரம்பித்துவைப்பார். (கு)

# வேலை தேடிச்செல்லும் தமிழ் இளைஞர் மீதும் முட்டுக்கட்டை

## தொழில் அமைச்சு மீது 'சிவா' கண்டனம்

### "பொருளாதார நிலையில் இருள் சூழ்ந்துவிட்டது"

(கொழும்பு)

"வேலைவாய்ப்பு அளிப்பதில் தமிழ்மக்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளனர், மத்திய கிழக்கிற்கு தாங்கள் எடுத்த முயற்சியினால் செல்ல முயன்ற தமிழ் இளைஞர்களுக்குக்கூட தொழில் அமைச்சு முட்டுக்கட்டை போடமுயன்றதை என்னால் நிரூபிக்க முடியும். இன்றுள்ள நிலைமையில் மாதம் 2000 ரூபா சம்பளம்பெற்றாலும் 4 பேர் கொண்ட குடும்பம் வாழ முடியாது.

"கொள்கைகளை ஆடைகளை மாற்றுவதுபோல் மாற்றிவிட முடியாது. போர்த்துக்கேயரிடம் நாம் இழந்த இறைமையைத் திரும்பப் பெறுவதுதான் எமது இலட்சியம்."

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம் பியுமான திரு எம் சிவசிதம்பரம் நேற்று பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

"உலக நாடுகளில் எல்லாம் பிரச்னைகள் உண்டு ஆனால் இலங்கைதான் பிரச்னைகள் பற்றி பேச முன்வந்தால் காவிமுகத்திடலில் வைத்துச் சுடுவோம், கழுகிலேற்றுவோம் என்கிறார்கள்.

"நிதி அமைச்சின் வரவு-செலவுத் திட்டத்தில் வியாபார மொத்த விற்பனவு வரி மூலம் தான் ஏழை பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். செல்வந்தர் பாதிக்கப்படவில்லை.

"நிதி அமைச்சர் நிதி தொடர்பான விடயங்களில் பாராளுமன்றக்கட்டுப்பாட்டை மீறி செயல்படுகிறார் இலங்கை பொருளாதார நிலைபற்றிய விபரங்களை இலங்கையிலும் பார்க்க லண்டன், வாஷிங்டனில் கூடுதலாக பெறமுடிகிறது. இதனால் பூரணமாக விவாதிக்க முடியாமலிருக்கிறது.

79முதல் வழங்கப்பட்ட உணவு முத்திரை உச்சவரம்பு 300 ரூபாவாக இருக்கிறது இன்றுள்ள நிலையில் இதனை உயர்த்தவேண்டும்.

'வெளிநாட்டு கடனைப் பெறும்போது எப்படி திருப்பி கடனை கொடுப்பதென்பதை நாட்டுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

"அரசு ஒருகையால் கொடுத்துவிட்டு மற்றக்கையால் பறிக்கிறது. அத்தியாவசியபொருட்களை குறிப்பிட்ட விலையில் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"தமிழ் மக்களுடைய அரசியல் வாழ்வா? சாவா? என்கின்ற நிலையில் இருக்கிறது. யாழ். எம், பி,க்கும் பாரியாருக்கும் நடந்த விஷயங்கள் இதனையே எடுத்துக்காட்டுகிறது.

"இந்தனைகளை ஆடை அணிகளை மாற்றுவதுபோல் மாற்றிவிட முடியாது. போர்த்துக்கேயரிடம் நாம் இழந்த இறைமையை மீளப்பெறுவதுதான் எமது இலட்சியம் என்பதைத் திட்டவட்டமாகக்கூறுகிறேன்.

"நாட்டின் அமைதியும், சமாதானமும் இன்றி பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியாது. சம்பிரதாயபூர்வமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறேன்

"நாட்டின் பொருளாதார நிலை மிகுந்த நோய்வாய்ப்பட்டுள்ளது என்பதை நிதியமைச்

(6ம் பக்கம் பார்க்க)

யாழ். அபிவிருத்திச் சபை

## நிறைவேற்றுக்குழு நாளை முதல் தடவையாகக் கூடும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழு சுமார் 3 மாதங்களுக்குப்பின்னர் நாளை புதன்கிழமை கூடும்.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் நிறைவேற்றுக்குழுத்தலைவராக இருக்கிறார் இவர் வெளிநாடு சென்றிருந்ததால் நிறைவேற்றுக்குழுக்கூட்டம் நடைபெறவில்லை

சட்டங்களை ஆக்குவது மாவட்ட அபிவிருத்திசபை அவற்றை நிறைவேற்றுவது நிறைவேற்றுக் குழு, கூட்டம் யாழ் செயலகத்திலுள்ள மாவட்ட அமைச்சின் பணிமனையில் நடைபெறவிருக்கிறது (மா)

## அமைச்சர் லலித் எழுப்பிய சந்தேகம்

(கொழும்பு)

"எதிர்க்கட்சியினர் ஆட்சிக்கு வந்தால் மகாவலித்திட்டம், வீடமைப்புத் திட்டங்கள், சுதந்திர வர்த்தக வலயம் ஆகியவற்றை கைவிடுவார்களா? என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்."

வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசுகையில் சந்தேகம் எழுப்பினார்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

"ஜனாதிபதி ஜெயவர்த்தனா மூலம் மட்டுந்தான தமிழ்மக்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்க முடியுமென்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார். அதுமட்டுமன்றி இந்த அரசு வந்தபின்னர் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க சில முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். நல்லூர் எம்.பி. மாவட்ட அபிவிருத்திசபைகளின் செயல்பாடுகள் பற்றி குற்றம் சுமத்தினர். அபிவிருத்திசபைகளை நாங்கள் தான் கொண்டுவந்தோம். ஆனால் அவற்றை தோல்வியடைய விடமாட்டோம். நிதி நிலைமை காரணமாகத்தான சில பிரச்னைகள் இருந்துவருகிறது

திரு எம். சிவசிதம்பரம்: எதிர்க்கட்சித்தலைவரும், நானும் மாறி மாறி பந்து வீசுகிறோம். ஆனால் அடிப்பவர் ஒருவராகத்தான இருக்கிறார்.

அமைச்சர் அத்துலத்முதலி: ஆட்கள் மாறினாலும் ஒரே பந்தாகத்தானிருக்கிறது அதனை அடிப்பதில் கஷ்டமிருக்காது (ம-அ)

## அவசரகால நிலைமை மேலும் ஒருமாதம் நீடிக்கும்

(கொழும்பு)

நாடு முவதும் அவசரகால நிலை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 17ம் திகதி முதல் ஒருமாத காலத்திற்கு நாடு மூழுவதும் அவசரகாலநிலை நீடிக்கப்பட்டிருக்குமென நேற்றுப் பாராளுமன்றத்தில் சபாநாயகர் அல்ஹாஜ்பாக்கீர் மாக்கார் அறிவித்தார்.

அவசரகாலநிலை நீடிப்புத் தொடர்பான விவாதம் இன்று செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்றும் தகாலமாக நாடு முழுவதும் அவசரகால நிலை அமுலிலிருந்துவருவது தெரிந்ததே.

நாட்டில் பரவலாக நடந்த இனக்கலவரங்களைத் தொடர்ந்து ஆகஸ்ட் 17ம் திகதி முதல் நாடுமுழுவதும் அவசரகலநிலை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அவசரகாலநிலையை நீடிப்பதானால் அதனை பாராளுமன்றம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் அங்கீகரிக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (ம-வெ)

## 6 பெண்களுக்கு மீண்டும் றிமாண்ட்

(சுண்டிக்குளி)

யாழ் நகரில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இளம் பெண்களை யாழ் .நீதவான் திரு. ரி. ஜோசநாதன் மீண்டும் இருவாரம் விளக்க மறியலில்

6-ம் பக்கம் பார்க்க

அரிய சந்தர்ப்பம்

றேடியோ—டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங், P. M. G. HOTEL MANAGEMENT பயிற்சி வகுப்புக்களுக்கு 20-11-81 வரை மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர். நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி
11, மொடசார் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (1478)

மணிவாக்கு

துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

— பாரதியார்

# நமது நோக்கு

## பட்ஜட் விவாதம்

நேற்று ஆரம்பமான வருடாந்த விழாவாகிய பட்ஜட் விவாதம் தோற்ற அரசுக்கு ஒரு பாரிசவாத நிலையை ஏற்படுத்துமா? சந்தேகம்.

சாதாரண மக்களுக்கு எந்த விதத்திலும் நன்மை அளிக்காத வரவுசெலவுத் திட்டம் இது என்று எதிர்க் கட்சியினர் அனைவரும் ஏகமனதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். இதில் என்ன பிரமாதம்! இதற்கு மாற்று ஆலோசனைகள் இந்த விவாதத்தில் கிட்டுமாவென்பதே கேள்வி.

ஏற்கனவே ஜனாதிபதி ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு நினைவூட்டிய கொள்கை உறுதியைக் கவனித்தால் "நாய்க்கு ஊலக்கும் பாலைப் பனையில் தொடர்வது திண்ணம்" என்ற ஆங்கிலப்பழமொழி நினைவுக்கு வருகின்றது.

"சுதந்திர நாட்டிக் கட்டுப்பாடற்ற பொருளாதாரம், வேலையின்மையை ஒழிக்க மக்கள் நல்வாழ்வு வாழ அபிவிருத்திக்கு ஆவன செய்தல். இந்த உறுதியான நோக்கிலிருந்து எக்காரணம் கொண்டும் அரசு இம்மியளவும் விலகாது" - ஜனாதிபதி ஒரு தலைப்படி அடித்திருக்கிறார்.

நிதி அமைச்சரின் முடிவுரையில் காணப்படும் மணிமொழி இதற்குப் பக்கச் சார்பாயமைகிறது. "நாடொன்று இருவழிகளில் தான் ஆட்சி செய்யமுடியும் ஒன்று! முதலாளித்துவ முறை. மற்றது; கம்மியூனிஸ்ட் முறை. இவ்விரண்டுக்குமிடையே வேறெதுவுமில்லையாது. ஸ்ரீலங்கா சுதந்திர ஆட்சியென்பது பகற்கனவு" என்று முடிவு கட்டியிருக்கிறார் திரு. ரோனி டி மெல்.

இந்த அரசியல் பின்னணியில் வருடாவருடம் ஐந்து பட்ஜட்டுகளைக் கண்ட நிதி (புலி) அமைச்சர் எதற்கும் அஞ்சாதவர்போல் காணப்படுகிறார்.

இருப்பினும் பாவம் பழிக்கு அஞ்சவேண்டிய இவர், ஏழை மக்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும்; தனியார்துறைத் தொழிலாளிகளுக்குத் தயவு காட்ட வேண்டும்.

அரசாங்க ஊழியர்களுக்கும் ஒய்வு ஊதியம் பெறுவோர்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் இவர்களுக்கும் உரித்தாக வேண்டும். இவை பேச்சில் மட்டும் இருந்தால் பயனற்றது.

அது மட்டுமல்ல; செல்வர்களுக்கும், அவர்களின் ஸ்தாபனங்களுக்கும் விதிக்கப்படும் வரிகள் ஏட்டளவிலேதான் இருப்பது வழக்கம். வரிகளிலிருந்து நழுவ இவர்களுக்கு ஆற்றலும் உண்டு அனுபவமும் உண்டு. ஒழுக்கமுள்ள பிரஜைகளாக இவர்கள் அரசுக்குரிய வரியை தேச பக்தியுடன் செலுத்த முன்வர வேண்டும்; முடியாவிட்டால் மடக்கிப்பிடிக்கும் வழி அவசியமானது. கட்டுப்பாடற்ற பொருளாதாரம் கட்டுப்பாடற்ற சமுதாயத்தை உருவாக்கி வருவது இன்றைய வரலாறு.

எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கைத்தரம் வானளாவி வளராமல் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. வரிகள் அனைத்தும் ஏழை மக்களின் தலையில் கட்டி அடிக்காமல் அவர்கள் பட்டினியால் மடியாமல், பாவனையாளர் சங்கம் விலைக்கட்டுப்பாடு அதிகாரம் முதலியன தீவிரமாகச் செயலாற்ற துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

## பாகிஸ்தான் பிரச்சினை

காலஞ்சென்ற முன்னைநாள் ஜனாதிபதி மொஹமத் அலி பூட்டோவின் ஒழுங்கற்ற ஆட்சியைக் கவிழ்த்து இராணுவ ஆட்சியை அமைத்த இன்றைய ஜனாதிபதி ஸியாவுல் ஹக் நாட்டை நல்வழிக்கு இட்டுச்செல்வாரென்ற நம்பிக்கை ஒருகாலம் இருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டை நிலைநாட்டி, சட்ட ஆட்சிக்கு மதிப்பளித்து மக்கள் மனத்தில் அச்சம் ஊற்றி நம்பிக்கைவரக்கூடிய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட காலம் அது.

நாலரை வருட ஆட்சியின் இன்று இந்த நம்பிக்கை இழந்த மக்கள் பெரும்பான்மையர் எனலாம்.

இறந்த ஆதாரமாக ஜனாதிபதி ஸியாவுல் ஹக் இன்றுவரைக்கும் மறைந்த தலைவர் பூட்டோவின் குடும்பத்தினரை பூண்டோடு அழிக்கும் திட்டத்தில் ஈடுபடுவதாகக் கருதப்படுகிறது.

நாட்டுக்கு ஒரு நல்ல குடியாட்சிமுறையை வகுத்து வைப்பதாக பல வருடங்களாக உறுதியளித்த வந்த ஜனாதிபதி ஹக் இன்று அது சாத்தியமில்லை என்று தொண்டிச்சாட்டுகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

அண்டை நாடுகளான இந்தியாவும், சோவியத் யூனியனும் போகும் போக்கைக் கண்டித்து இவை இரண்டும் பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அபாயமான நிலையை ஏற்படுத்தி வருகின்றன என்பதே அவருடைய சாட்டாகும்.

அமெரிக்க ராணுவ உதவி பாகிஸ்தானுக்கு தாராளமாய் உண்டு. எனவே சர்வாதிகாரம் தொடர வழி உண்டு.

இதனை இந்தியாவிழிப்புடன் கவனித்து வருவது இயற்கை. சோவியத் யூனியனின் அத்துமீறிய செயல்களுக்கு ஒரு தடையாக பாகிஸ்தானை ஒரு [illegible] மாயாக அமெரிக்கா பாவிக்கின்றது.

பாகிஸ்தான் மக்களின் தலைவிதி இது!

## சுமங்கலிபூசையும் தீப விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் திருவண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார்) கோவிலில் எதிர்வரும் 10ம் திகதி மாலை ஸ்ரீமகாலட்சுமிபூசை, சுமங்கலி பிரார்த்தனை, திருக்கார்த்திகைத் தீபவிழா நடைபெறவுள்ளது. அன்று அம்பாள் திருஉலாவும் ஜோதி ரூப தரிசனக் காட்சியும் இடம்பெறும்.

# நாளை ஆரம்பமாகும் யாழ். மாவட்ட பாவனையாளர் சங்க சமாஜம்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 176 கிராமசேவகர்கள் பிரிவுகளும் இருக்கின்றன. இம் மாதம் 18ந் திகதி யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் தலைமையில் மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் சமாசம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. மாவட்ட சமாசம் சீராகவும் திருப்திகரமாகவும் எல்லாப் பிரதேசங்களையும் நியாயமான முறையில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு முன்னோடியாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் பிரதேச பாவனையாளர் சங்கங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. கிராம சேவையாளர் பிரிவிற்கான பாவனையாளர் சங்க பிரதிநிதிகள் பிரதேச சங்கங்களில் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். மாவட்ட சமாசத்திற்கு பிரதேச சங்கப் பிரதிநிதிகள் பங்கு கொள்கிறார்கள். மாவட்ட சமாசம் ஏற்பட்ட தன் பின்னர் தேசிய ரீதியில் பாவனையாளர் சங்க ஒன்றியம் ஏற்படுத்தப்படும். அதனைத் தொடர்ந்து தேசிய மட்டத்திலான இந்த இயக்கம் சர்வதேச பாவனையாளர் ஒன்றியத்தில் இடம்பெறும். இவ் வேற்பாடுகள் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் பாவனையாளர்களுக்கும் பயனளிப்பனவாகும்.

### கல்விப் பகுதி ஒத்துழைப்புத் தேவை

இன்றைய சூழ்நிலையில் அளவைகள் நிறுவைகள் முறைகள் மெட்றிக் முறைக்கு கொண்டு வரப்பட்டபோதும் வியாபாரிகள் சரியான முறையில் இதை நடைமுறைப்படுத்துவதில்லை. இதனால் படித்தோரும் படிக்காதோரும் பாதிக்கப்படுகிறார்கள். பாவனையாளர்களும் மெட்றிக் முறையிலே அதாவது றாத்தல் என்று கேட்காது கிலோ கிராம் என்றும் யார் என்று கேட்காது மீற்றர் என்றும், கலன் என்று கேட்காது லீற்றர் என்றும் பொருட்களைக் கேட்க வேண்டும். பொருட்களை வாங்குவதன்றி பற்றுச் சீட்டுக்களையும் கேட்டுப்பெற்றுக் கொள்ளவேண்டும். இம்மாற்றம் அடித்தளத்திலிருந்து வர வேண்டும். அதாவது பாடசாலையிலிருந்தே இம் மாற்றம் வரவேண்டும். இதற்கு கல்வி இலாகாவும் ஒத்துழைக்க வேண்டும். இன்றும் கூட பாடசாலைப்புத்தகங்களில் றாத்தல், யார், அடி முறைகளும் கலன் முறைகளிலுமே எழுதப்படுகின்றன. இம்முறை மாற்றியமைக்கப்பட்டு இவையும் மெட்றிக் முறைக்கு மாற்றப்படவேண்டும்.

### பாணின் நிறை

பாடசாலை மாணவர்களிடையே ஏற்படும் தாக்கம் வீடுகளில் ஏற்பட்டு வியாபார நிலையங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி மக்களை புதிய அளவை முறைக்கு வழிநடத்திச் செல்ல உதவிபுரியும். மக்களிடையே மெட்றிக் முறை பற்றிய அறிவு பூரணமாக இன்மையால் வியாபாரிகள் இரண்டு றாத்தல் ஒரு கிலோ என்று கூறி விற்கிறார்கள். இதனால் பாவனையாளர்கள் 3 அவுன்ஸ் நிறையுடைய பொருட்களை இழக்கிறார்கள். இதேபோல் 450 கிறாம் இருக்க வேண்டிய பாணுக்குப் பதிலாக 380 முதல் 450 கிறாம் வரையில் பாண் தயாரிக்கிறார்கள். பாணின் நிறை இடத்திற்கு இடம் வித்தியாசப்படுகின்றது. கடைக்காரர்களும், பேக்கறிக்காரர்களும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு நிறையைக் குறைத்து பாணைத் தயாரித்து பாவனையாளருக்கு வழங்கி விட்டு 450கிறாம் நிறையுடைய பாணுக்குரியபணத்தைப் பெறுகிறார்கள். இப்படிச் செய்வதனால் பாணை விற்பதற்கு கடைக்காரருக்கு பேக்கரிச் சொந்தக்காரரினால் வழங்கப்படும் கமிஷன் கூடுதலாகக் கிடைக்கிறது. ஆனால் பாவனையாளர் சுரண்டப்படுகிறார்கள். தனிக்கடைகள் மாத்திரமன்றி பொது ஸ்தாபனங்களிலும் அளவைகள் நிறுவைகள் முத்திரையிடப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் பொருட்களை வாங்குவதற்கு ஒரு தராசும் விற்பதற்கு இன்னொரு தராசும் பாவிக்கப்படுகின்றது. பொருட்களை வாங்கும்போது தராசின் ஒரு பக்கத்தையும் விற்கும்போது தராசின் மறு பக்கத்தையும் பாவிக்கிறார்கள். இவைகளைப் பற்றி பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கடையிலிருக்கும் பழைய படிகளை ஒழிப்பதற்கு பாவனையாளர்களும் தகவல் கொடுத்து உதவி செய்யவேண்டும். அத்துடன் வியாபாரிகளுக்கு தொல்லை கொடுக்காமல் பாவனையாளரும் கிலோ முறையில் பொருட்களைக் கேட்டுவாங்கிப்பழகவேண்டும்.

### இரண்டுவிதமான விலைகள்

விலைகள் இருவகையானவை. ஒன்று அரசாங்கத்தினால் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படும் கட்டுப்பாட்டு விலை. உதாரணம்: சீனி, பாண், மா, குளிர்பானங்கள், மைசூர்ப் பருப்பு முதலியன. மற்றது அரசாங்கத்தால் வர்த்தமானி மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருளென அறிவிக்கப்படும் பொருட்களுடைய விலைகளாகும். இவற்றின் விலைகள் விற்பவர்களினால் அந்தந்தப் பொருட்களின் சுருள்களிலோ பெட்டிகளிலோ பாவனையாளர்களுக்குத் தெளிவாக விளங்கக்கூடியமுறையில் ஆகக்கூடிய சில்லறை விலை என எழுதப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் விலைப்பட்டியலிலும் பொருட்களுடைய விலைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும். குறிப்பிட்ட குறித்த விலையை மாற்றவோ குறித்த விலையிலும் கூடுதலாக விற்கவோ கூடாது.

வர்த்தகத்திற்கு உகந்ததல்லாத முத்திரையிடப்படாத தராசுகள் பாவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ப. நோ. கூ. சங்கங்களுக்கும் தனிப்பட்ட வியாபார ஸ்தாபனங்களே. அவைகளும் உணவுக் களஞ்சியங்களிலிருந்து பொருட்களை பாரமெடுக்கும்போது சரியாகப் பாரமெடுத்து சரியான முறையில் விநியோகமும் செய்யவேண்டும், அத்துடன் மேடைத்தராசுகளில் குறிப்பிட்ட அளவுக்கு மேலாக மூடைகளைப் போட்டு நிறுக்கக் கூடாது. அப்படி நிறுக்கப்படும்போது தராசு வித்தியாசமான நிறைகளையே காட்டும். ப. நோ. கூ. சங்கங்களும் பல பெரிய வியாபார நிறுவனங்களும் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டபோது முத்திரையிடப்படாத பாவனைக்குதவாத தராசுகள் பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### பாவனையாளர் நன்மைக்காக

வியாபாரிகளும் பாவனையாளரும் பயனடையக்கூடிய முறையில் யாழ் கச்சேரியிலுள்ள அளவைகள் நிறுவைகள் பிரிவும் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவும் இயங்கிக்கொண்டிருக்கிறது. 2 பிரிவிலும் கச்சேரி வேலை நேரம் முழுவதும் அதாவது காலை எட்டு முப்பது மணி முதல் மாலை 4. 15 மணிவரை பரிசோதகர்கள் இருந்து பாவனையாளர்களுடைய முறைப்பாடுகளைக் கவனித்தும் வியாபாரிகளுடைய கஷ்டங்களுக்கு நிவாரணம் கொடுத்தும் வருகிறார்கள். இவற்றைப் பாவனையாளர்களும் வியாபாரிகளும் நன்கு பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

# மக்கள் கருத்து

## இச்சம்பள உயர்வு எந்த [illegible]தத்தில் பொருந்தும்?

அரசாங்க ஊழியர்களுக்கு மாதம் ரூபா 107/- சம்பள உயர்வு கொடுத்திருப்பது பற்றிப் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓர் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகூட ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது.

பட்ஜெட் விபரங்கள் வெளிவர முன்னரே அத்தியாவசியப் பொருட்களின் விலை விஷம் போல ஏறிவிட்டது. செட்டி நட்டம் ஊர்மேல் என்பார்கள். புதிய மொத்த விற்பனை வரியை மக்களே கொடுக்கிறார்கள்.

கூலியாள் ஒருவனுக்கு ஒரு நாள் சம்பளம் ரூபா 25 வேலை கிடைத்து 20 நாட்கள் வேலை செய்தால் மாதம் ரூபா 500 கிடைக்கும், இன்றைய நிலையில் ஒருவனுக்கு சாப்பாட்டிற்கு மாத்திரம் நாள் ஒன்றுக்குக்குறைந்தது ரூபா 20 தேவைப்படுகின்றது. இது மாதம் ரூபா 600 ஆகும். மீதி ரூபா 100க்கும் மற்றும் உடை, போக்குவரத்து, வைத்தியச் செலவு ஆகியவற்றிற்கு வேறு வழிகளைத்தேட முயற்சிக்கிறான். இதனால்தான் நாட்டில் இன்று கொள்ளை, வழிப்பறி ஆகியன மலிந்திருக்கின்றன.

வியாபாரிகள் விலையேற்றங்கள், நிறைக்குறைவுகள் கலப்படங்கள் செய்து சமாளித்துக் கொள்கிறார்கள். வீதி ஓரங்களில் பெட்டிக்கடை வியாபாரங்கள் செய்பவர் நாள் ஒன்றிற்கு 30 ரூபாவுக்கு மேல் ஆதாயம்பெறுகிறார்கள். இவர்களுக்கே மாத வருமானம் ரூபா 900க்கு மேல்வரும்.

1942ம் ஆண்டில் ஓர் அரசாங்க ஊழியருக்கு ஆரம்பச் சம்பளம் ரூபா 50 அன்று ஒருநேரச் சாப்பாடு (விசேஷம்) 20 சதமே. இன்று 6ரூபா இது 30 மடங்கு ஏற்றம். இக்கணக்கின்படி இன்று ஒருவன் பெற வேண்டிய ஆரம்பச் சம்பளம் 1500 ரூபாவாக இருக்கவேண்டும்.

ஆனால் 1982ல் இருந்து ஆரம்ப சம்பளம் ரூபா 645 இது எந்த விதத்தில் பொருந்தும்?

அ. சபாபதிப்பிள்ளை
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

## நீர்ப்பறவைகளுக்கு யாழ்ப்பாணத்திலும் இடம்கிடைக்குமா?

கடந்த 11-11-81 புதன்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் 'நீர்ப்பறவைகளுக்குப் புகலிடம்' என்ற தலைப்பில் ஓர் கட்டுரையை சுந்தரலிங்கம் என்னும் அன்பர் எழுதியிருந்தார். அவருடைய எண்ணங்கள் வரவேற்கத்தக்கது. இன்று நம் இலங்கையை எடுத்துப்பார்க்கும்போது இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் புகலிடம் அளிக்கும்வகையில் விலங்கு [illegible] பத்து, யால, குமன. போன்றவைகளும் கொழும்பில் மிருகக்காட்சிசாலைகளும் அமைந்திருக்கின்றனர். இவற்றைப்

(6ம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் ஜனாதிபதி தேர்தல்:

# அப்துல் சதார் அமோக வெற்றி

டாக்கா, நவ. 16
பங்களாதேஷ் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜனாப் அப்துல் சதார் அமோகவெற்றியீட்டி வருவதாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி ஜனாப் அப்துல் சதாருக்கு 11 லட்சத்து 18,000 வாக்குகளும், இவரை எதிர்த்து போட்டியிட்ட அவாமிலீக் கட்சியின் வேட்பாளர் ஜனாப் கமால் ஹுசெய்னிற்கு 2 லட்சம் வாக்குகள் கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற வாக்களிப்பில் 55 சத விகிதமான மக்கள் கலந்துகொண்டதாகவும். வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் பங்களாதேஷ் ஜனாதிபதி ஜனாப் ஷியாவுல் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அங்கு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவது தெரிந்ததே. (வெ)

## ஸ்பெயினில் ஆர்ப்பாட்டம்

மட்ரிட். நவம்பர் 16
வார்சோ ஒப்பந்த நாடுகளில் ஸ்பெயின் சேருவதை எதிர்த்து அங்குள்ள பல்கலைக்கழகத்திலிருந்து மூன்று லட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை மேற்கு ஜெர்மனியிலுள்ள பிராங்போர்ட் நகரிலும் புதிய விமானஓடுபாதை ஒன்று அமைக்கப்படுவதை எதிர்த்து பெருந்தொகையான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் கூறப்பட்டது. (வெ)

### கர்ப்பத்திலிருந்து சிசுவை

## வெளியில் எடுத்து சத்திரசிகிச்சை

வாஷிங்டன், நவ. 16
தாயின் கர்ப்பத்தில் இருந்து கருவை வெளியில் எடுத்து சத்திரசிகிச்சையொன்றை கலிபோர்னியா பல்கலைக்கழக டாக்டர்கள் செய்துள்ளனர்.

இவர்கள் தாயின் கர்ப்பத்திலிருந்து சிசுவை வெளியில் எடுத்து சத்திரசிகிச்சை செய்தபின்னர் மீண்டும் அதனை கர்ப்பப் பையினுள் வைத்தனர்.

இச்சிசு மரணமான போதும் அதற்கு சத்திரசிகிச்சை காரணமல்லவென்றும், வேறொரு நோய் அச்சிசுவிற்கு ஏற்பட்டதாலேயே அது மரணமானதென்றும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

### சோவியத் தூதரின் இல்லத்தில்

## துப்பாக்கிப் பிரயோகம்

நியூயோர்க், நவ. 16
ஐ. நா. ஸ்தாபனத்திற்கான சோவியத் தூதுவரின் இல்லத்திற்கு 12 முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கு யூதப் பாதுகாப்புச் சங்கமே காரணமென்று இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசியில் தெரிவித்தபோதும், யூதத் தீவிரவாதிகள் தாம் இச்செயலை மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ளனர். (வெ)

## குழந்தைக்கும் பருக்கி தாமும் நஞ்சு குடித்தாராம்

### காணித்தகராறு காரணமாம்

[துணுக்காய்]
மாமியாருக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட காணித் தகராறு காரணமாக தகப்பன் ஒருவரும் 4 வயது மகளும் மருந்து அருந்திய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனிக்குளம் குடியேற்றத் திட்டத்தின் யோகபுரம் - மல்லாவிக் கிராமத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. திருமணம் நடக்கும்போது மாமியார் காணி தருவதாக கூறியிருந்தாராம். ஆனால் இப்போ 5 வருடங்கள் கழித்தும் காணி கொடுக்கப்படவில்லையாம். இதனால் தனது மனைவியோடு அடிக்கடி சண்டையிட்டுவருவது வழக்கமாக இருந்துவந்துள்ளது. சம்பவதினம் மாமியார் அந்தக் காணியை வேறு யாரோ ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு ஆயத்தப்படுத்தினாராம். இதைக்கேள்வியுற்ற மருமகன் மனைவிக்கு அடித்ததுடன் மாமியாருடன் சண்டை இட்டுவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி நிறைய மது அருந்தினாராம். பின்பு தானும் மருந்தை குடித்துவிட்டு பாடசாலையால் வீடுவந்த தனது ஒரே ஒரு மகளுக்கும் (4வயது) பலவந்தமாக மருந்தை பருக்கினாராம். பின்பு இருவரும் மயங்கி விழவே மல்லாவி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இப்போது தந்தையார் சுகமடைந்துவருகிறார். சிறுமியின் நிலை மோசமடைந்ததால் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இப்போ சிறுமி ஓரளவு சுகமடைந்துவருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### உத்தர பிரதேச இடைத்தேர்தல்

## ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சிகள் ஆட்சேபம்

புதுடில்லி, நவ. 16
உத்தரப் பிரதேசத்திலுள்ள கர்வால் தொகுதியில் இம் மாதம் 22-ம் திகதி நடைபெறவிருந்த இடைத்தேர்தலை ஒத்திவைத்ததை ஆட்சேபித்து எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டிக்கு ஒரு கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை ஜனநாயகத்தை மீறும் நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சிகள் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த ஜூன் மாதம் நடைபெறவிருந்த இவ் இடைத்தேர்தல் எதிர்க்கட்சிகள் தெரிவித்த குற்றச்சாட்டின்பேரில் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. (வெ)

## 'பாகிஸ்தானில் குடியாட்சி விரைவில் சாத்தியமில்லை'

### ஜனாதிபதி ஷியாவுல்ஹக் கூறுகிறார்

இஸ்லாமபாத், நவ. 16
"பாகிஸ்தானில் மீண்டும் குடியாட்சி முறையை விரைவில் அமுலுக்குக் கொண்டு வரும் சாத்தியமில்லை."

மேற்கண்டவாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனாப் ஷியாவுல் ஹக் லாகூரில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்பின்னர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"பாகிஸ்தான் நெருக்கடியான நிலையில் தற்போதுள்ளதால் பத்திரிகைத் தணிக்கையும், அரசியல் நடவடிக்கைகளுக்குத் தடையும் அங்கு விதிக்கப்பட்டுள்ளது

"சோவியத் யூனியனாலும் இந்தியாவினாலும் சூழப்பட்ட பாகிஸ்தான் இக்கட்டான நிலையிலுள்ளது. பாகிஸ்தானில் நாலரை வருடங்களாக நடைபெற்றுவரும் இராணுவ ஆட்சி அண்மையில் தளர்த்தப்படாது என்றார். (வெ)

### கிளிநொச்சி வங்கிக் கொள்ளை

## துணுக்காய்ப் பகுதிக் காடுகளில் தொடர்ந்து தேடுதல் வேட்டை!

[துணுக்காய் நிருபர்]
கிளிநொச்சி வங்கிக்கொள்ளை சம்பந்தமான கொள்ளையர்களைத் தேடி பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து இங்குள்ள காடுகளில் தேடுதல்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

அண்மையில் மன்னார் பகுதியிலிருந்து வந்த இராணுவத்தினர் துணுக்காய், மல்லாவி வவுனிக்குளம், மாங்குளம் பகுதிகளிலுள்ள காடுகளில் தேடுதல்களை மேற்கொண்டனர்" அத்துடன் மல்லாவியில் சந்தேகத்தின் பேரில் ஒரு வாலிபரை கைது செய்து மாங்குளம் பொலிசில் ஒப்படைத்தனர் அத்துடன் துணுக்காய், மல்லாவி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளை பரிசோதித்து கொள்ளையர்கள் யாரும் மருந்து எடுத்து வருகிறார்களா எனவும் ஆராய்ந்ததுடன் ஆஸ்பத்திரி வளவுகளையும் சோதனை செய்தனர். சுமார் 100 பேர் கொண்ட இராணுவத்தினர் 4 வாகனங்களிலும் 5 ஜீப் வண்டிகளிலும் வந்தனர்.

இதைவிட மாங்குளம் பொலிசாரும் மாங்குளம் இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து இப்பகுதிகளில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள் வீதிகளில் வாகனங்களை தடுத்து நிறுத்தப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சந்தேகத்துக்கிடமானவர்களை அழைத்துச் சென்று விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். வவுனியா உதவி பொலிஸ் அதிபரும் இப்பகுதிக்கு விஜயம் செய்துள்ளார்.

## 'பூரண மனிதன் உருவாக சமயக் கல்வி அவசியம்'

(சுன்னாகம்)
"ஒழுக்கம் உயிரிலும் உயர்வானது" என்று வள்ளுவர் கூறிய பொற்கூற்று இன்றைய சமுதாயத்திற்கு அதிலும், மாணவர்களுக்கு பொருந்தும். திசை தெரியாது தவிக்கும் இன்றைய மாணவர்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச்செல்ல மும்மந்திரமான ஒழுக்கம், சத்திய அன்பு ஆகிய அரும்பண்புகளை கைகொடுக்கும். கல்வி, ஏட்டுச் சுரைக்காய் போன்றதல்ல. உண்மையே உயர்ந்த அறம். என்ன நேரினும் உண்மையிலிருந்து பிரளலாகாது"

இவ்வாறு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்திய யாழ் மருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் டாக்டர் இரகுநாதர் கனகசுந்தரம் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. பொன் நாகரத்தினம் தலைமைவகித்தார்.

பேராசிரியர் கனகசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், "சமயசார்பற்ற கல்வி மெய்க்கல்வி அல்ல. ஒரு பூரண மனிதனை உருவாக்க சமய அறிவு அவசியம் சமயம் அன்பை வளர்க்கும்; ஒழுக்கத்தை உருவாக்கும்" என்றார்.

தாபகர் நினைவுரை நிகழ்த்திய யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு சு நடராசா, "யாழ் மாவட்டத்தில் எச்சிறிய கிராமத்திலும் ஒரு கோயில், ஒரு பாடசாலை இல்லாதிராது. சமயமும், கல்வியும் இணைந்து வளர இவை உதவும். எம்மவரின் பொருளாதாரம் கல்விச்செல்வமே. இது அழிவற்ற செல்வம். எம்முன்னோர் தீர்க்கதரிசிகள். எமது தேவைகளை அன்று உணர்ந்து பாடசாலைகளைத் தாபித்துள்ளனர். இத்தகைய பெரியோர்களில் ஸ்கந்தாவின் தாபகரை நாம் முன்னணியில் வைக்கலாம். நாம்கள் இத்தகைய கல்லூரிகளுக்குச்செய்யக்கூடிய கைமாறு இவர்களது படைப்புக்களான கல்லூரிகளைப் பேணிவளர்ப்பதே என்றார்.

அதிபர் திரு. பொன். நாகரத்தினம் தமது அறிக்கையில், 'கல்லூரிகள் மக்களுக்கும் பயன் தரக்கூடியவையாக இருக்கவேண்டுமானால், அங்கு சேவைசெய்யும் ஆசிரியர் முழு மனநிறைவுள்ளவராயிருத்தல் வேண்டும். மகத்தான சேவை என்று மட்டும் முழங்குவது வெறும் வாய்ப்பந்தலாகும். ஆசிரியத்தொழிலில் இன்று உயர்வுகளும் இல்லை. வேதன வளர்ச்சியோ வாய்ப்பில்லை. ஆசிரியரில் பலர் வெளிநாடுகளை நாடுகின்றனர். இதனால் எம்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைவு ஏற்படுகின்றது" என்றார்.

மானிப்பாய் எம். பீ. திரு வி. தர்மலிங்கம் கல்லூரி முன்னாள் அதிபர் திரு 'ஒறேற்றர்' சீ சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

திருமதி இ. கனகசுந்தரம் பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ஈரானில் 7,000 அரசியல் கைதிகள்

தெஹ்ரான், நவ. 16
"ஈரானிய சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளில் மூன்றிலொரு பகுதியினர் அரசியல் கைதிகளாவர்."

மேற்கண்டவாறு ஈரானின் இஸ்லாமிய புரட்சிவாத நீதிமன்றத்தின் வழக்குத்தொடுநர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

"ஈரானிய சிறைச்சாலைகளில் 20,000 பேர் கைதிகளாகவுள்ளனர். இவர்களில் 7,000 பேர் அரசியல் கைதிகளாவர் என்றார்.

## சாட்டில் சயர் துருப்புக்கள்

லண்டன், நவ. 16
மத்திய ஆபிரிக்க நாடான சாட்டிலிருந்து லிபியத் துருப்புக்கள் வெளியேற்றப்படுவதையடுத்து அங்கு சயர் நாட்டைச் சேர்ந்த 250 பேர் வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நைஜீரியா, செனிகல் ஆகிய நாடுகளின் துருப்புக்களும் சாட் நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

சாட்டின் உள்நாட்டுக் கலவரங்களை அடக்க லிபியத் துருப்புக்கள் அங்கு சென்றிருந்தமை தெரிந்ததே. (வெ)

## பள்ளிமுனையில் சிறுவர் இல்லம்

[மன்னார்]
மன்னார் பள்ளிமுனையில் 25 சிறுவர்களை அனுமதிக்கக்கூடிய சிறுவர் இல்லம் ஒன்று எதிர் வரும் ஜனவரி மாதம் திறக்கப்படவுள்ளது

இச்சிறுவர் இல்லத்திற்கான மின்சாரம், குடிநீர் விநியோகம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும் சிறுவர் இல்லம் திறக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை மேற்கொண்டுவருகிறது. (கி[

## மரணவிசாரணை அதிகாரி இல்லை

[மன்னார்]
நானாட்டான் பகுதியில் திடீர்மரண விசாரணை அதிகாரியில்லாததால் திடீர் மரணம் ஒன்றை விசாரணை செய்ய 400 ரூபா செலவு ஏற்படுகிறது. இக்குறையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் எம் பி திரு பி எஸ். சூசைதாசன், மன்னார் மாவட்ட அபிவிருத்திசபைத்தலைவர் திரு பி எம். செபமாலை ஆகியோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 2 ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(17-11-81)

மேடம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணபலத்தைத் தேடிக்கொள்ளலாம்.

இடபம்: சந்தர்ப்பத்துக்கேற்ற வண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கு இடமுண்டு. மேலிடத்தின் வாழ்த்தும் கிடைக்கக்கூடும்.

மிதுனம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்குச் சோர்வைத் தரலாம். குடும்பத்திலும் சிறு பூசல்கள் தலைதூக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். அமைதி நன்று.

கடகம்: ஆசை அலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும். ஆணவப் போக்கினால் பிறருடைய பகைமையைச் சம்பாதித்துக்கொள்ள நேரிடும். மன அடக்கம் விரும்பத்தக்கது.

சிங்கம்: மேடைப் பேச்சாளர்கள் இன்று பெரும் புகழ் அடைவர். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

கன்னி: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு. மௌனம் நன்று.

துலாம்: வாகனச் சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

விருச்சிகம்: பொருளீட்டுந் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அன்பர்களின் அன்பு உங்களைப் பரவசப்படுத்தும். குடும்ப வாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர் பெரும் மதிப்புக் கொடுப்பர்.

தனு: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் கவனத்துடன் இருக்கவேண்டும்.

மகரம்: கருத்தொருமித்த காதலர்கள் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம் பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும். கௌரவம் உயரும்.

கும்பம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக அமைவார்கள். மொட்டைக் கடிதம் ஒன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும். தொழில்துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

மீனம்: பிதாவழி மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம். ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டுவீர்கள். பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கக்கூடும். பெரியவரின் ஆதரவு தவறாமல் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி: 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த்-பாலாஜி
தீ

ராஜன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

Regal Phone: 360 Jaffna
Daily 10-30, 2-15, 4-30 7-00 & 9-15
WALTS DINSEY'S
The Black Hole (Color)

இன்று மட்டும்
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி — தேவிகா
பச்சை விளக்கு

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
பார்த்தால்
பசி தீரும்

சாந்தி 9வதுவாரம் ... ஜனத்திரள்வாரம் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்... ஸ்ரீதேவி...
குரு
தம்பிரான் ... நாகேஷ் ... சுந்தரராஜன்
(கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
அரசிளங்குமரி
20-ந் திகதி முதல்
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர். - லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
BRUCE LEE'S
ENTER THE DRAGON

(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
நாகேஷ், கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)

வின்ஸர் 2-வது ஜனத்திரள் மாதம்
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி ப. 2-30, 6-15, 9-30
காளி
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்), விஜயகுமார், படாபட், கருணிராஜன்
(கலர்)
பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள் பல லட்ச ரூபா செலவில் உருவ பயங்கர சண்டைகள்—இனிய பாடல்கள்—நிறைந்த நெஞ்சைத் தொடும் காவியம்


# ஆலயங்களில் புராணபடனம் அருகிப்போகிறதே!

## மா. அ. சபைத்தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

சைவ ஆலயங்களில் புராண படனம் செய்வது அருகிப் போவது குறித்து யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு சு. நடராசா கவலை தெரிவித்துள்ளார்.

மல்லாகம் இந்துசமய அபிவிருத்திச் சபை 20-வது ஆண்டு நிறைவு விழாவில் திரு. சு நடராசா கலந்துகொண்டு உரையாற்றினார்.

மல்லாகம் பிள்ளையார் கோவில் வெளிமண்டபத்தில் சபைத்தலைவர் திரு அ. சரவணமுத்து தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

யாழ். அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு சு. நடராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"இன்றைய சந்ததியினரில் அநேகமானோருக்கே புராண படனங்கள் தெரியாத நிலையில் இப்படியொரு முறை கோவில்களில் அனுஷ்டிக்கப்பட்டதே தெரியாமல் அழிந்து போய்விடும். ஆதலால் இரச[illegible]ங்கள் தோறும் புராணபடனங்கள் பற்றி இந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். மேலும் மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டிகள் வைத்தும் ஆர்வத்தை வளர்க்கவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

இவ்விழா ஆரம்பத்தில் பிரமஸ்ரீ மு நாகேந்திர சர்மா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மல்லாகத்தைச் சேர்ந்த இந்துக் கல்லூரி, கனிஷ்ட வித்தியாசாலை, விசாலாட்சி வித்தியாசாலை மாணவர்களின் பேச்சு, பக்திப்பாடல்கள், தேவாரம், கிராமிய நடனம் நாடகம் போன்ற சமயசம்பந்தமான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

திருமதி சு நடராசா பரிசில்கள் வழங்கினார்.

சபைச்செயலாளர் சி. விஜயராசலிங்கம் நன்றி கூறினார்.

# பல்துறை ஆற்றலை வளர்க்க மன்றம் நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

ஏழாலைப் பகுதியில் இளம் சிறார்களிடையே பல்துறை ஆற்றலை வளர்க்க ஏழாலை முன்னேற்ற மன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இம்மன்ற ஆதரவில் வாரமொருமுறை செஞ் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. வட பிரதேச செஞ். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஆணையாளர் திரு சி. எஸ். சுப்பிரமணியம் இவ்வகுப்பினை நடத்திவருகிறார்.

அத்துடன் வாரமொருமுறை இலக்கிய ஆராய்ச்சி வகுப்புக்களையும், பண்ணிசை வகுப்புகளையும் மன்றம் நடத்தி வருகிறது. இலக்கிய வகுப்புகளுக்கு சிவநெறிச் செல்வர் சிவ. சண்முகவடிவேலும், பண்ணிசை வகுப்புகளுக்கு ஓதுவார்மூர்த்தி வி. ரி. வி சுப்பிரமணியமும் பொறுப்பாசிரியர்களாகக் கடமைபுரிகின்றனர்

# பொன்னாலை பெருமாள் கோயில் தேர் வேலைகளை முடிக்க நிதி போதவில்லையாம்!

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் சித்திரத் தேர் செய்யும் பொறுப்பை ஏற்று ஒருபகுதி வேலையை முடித்துக்கொண்ட மயூரம் சிற்பாசாரி ஸ்ரீ ஏகாம்பர சுபதியார் கோஷ்டியினர் சன்னதி முருகன் கோவில் புதிய தேரைச் செய்ய யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளனர். பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் தேர் பூர்த்திசெய்ய நிதி கிடைக்காததால் தேர் வேலைகள் யாவும் ஸ்தம்பித்த நிலைமையிலுள்ளன. தேர் சிற்பவேலைகள் செய்வதற்கு போடப்பட்ட மண்டபம் சென்றவாரம் பெய்த பெருமழைக்கு விழுந்துவிட்டது. இதனால் தேர்சபையினருக்கு ரூபா இரண்டாயிரத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

# பாரதி நூற்றாண்டுவிழா

(முல்லைத்தீவு)

பாரதி நூற்றாண்டுவிழா தொடர் கருத்தரங்கு வரிசையில் முதலாவது கருத்தரங்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கை அண்ணாவியார் சு. சிவகுரு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். செல்வி ஆ. உதயராணியின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் விழா ஆரம்பமானது.

பாரதி நூற்றாண்டுவிழா கருத்தரங்கிலே தலைமையுரை நிகழ்த்திய முல்லைக் கலைஞர் ஒன்றியத்தின் தலைவரும், முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபருமான திரு வி. சிவகாரவேலு பாரதிக்கு விழா எடுக்கவேண்டிய முக்கியத்துவத்தினையும், பாரதியின் சிறப்புக்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

விழாவில் சிறப்புரை நிகழ்த்திய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் விரிவுரையாளர் திரு. முல்லைமணி "தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி" என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்தினார்.

அடுத்து முல்லைக் கலைஞர் ஒன்றியத்தின் பாரதிவிழா கருத்தரங்குத்தொடரில் ஒவ்வொரு கருத்தரங்கிலும் வன்னிமண்ணில் இலைமறை காயாக உள்ள கலைஞர்களை வெளிக்கொணரவும், அறிமுகம்செய்யவும் செய்யப்பட்ட ஏற்பாட்டின்பேரில் இம் முதலாவது கருத்தரங்கில் "என் இ[illegible]" என்னும் முல்லையூரானின் கவிதைத் தொகுதி அறிமுகம்செய்துவைக்கப்பட்டது.

சிறப்புப் பிரதியை வற்றாப்பளை வித்தியாலய அதிபர் திரு. சு. மூர்த்தையாவும், வற்றாப்பளை இ. சிவராசலிங்கமும் பெற்றனர்.

ஒன்றியத்தின் தலைவர் திரு. வி. சிவகாரவேலு நூலாய்வு செய்தார்.

அடுத்ததாக திரு. சி. குலசேகரம் பாரதியின் பாடல்களை இலங்கை இசையுடன் பாடினார்.

மறைந்த கவிஞர் கண்ணதாசனுக்கு [illegible] திரு. தெய்வேந்திரம்பிள்ளை அஞ்சலி செலுத்தினார். (அ

# சிரமதானமூலம் நிதி சேகரிப்பர்

(துனுக்காய்)

புத்தூர் மகாத்மாஜி சனசமூக நிலையத்தினரின் பொதுப் பணி மன்றத்தைச் சேர்ந்த சுமார் 40 இளைஞர்கள் சிரமதான பணியை மேற்கொண்டுள்ளனர். தமது சனசமூக நிலையத்தின் நிதி சேகரிக்கும் பணிக்காக இந்த சிரமதானத்தை 2 வாரங்கள் மேற்கொள்ளுவதற்காக வவுனிக்குளம், பாண்டியன்குளம் பகுதிக்கு சென்றுள்ளார்கள். அங்கு இவர்கள் அரசாங்க ஒப்பந்தக்காரர்களுடன் தொடர்புகொண்டு வீதிகள் அமைத்தல் போன்ற வேலைகளை கட்டணத்திற்குச் செய்து நிதியை சேகரிப்பார்கள். திரு. சி. செல்லக்கண்டு தலைமையில் சென்ற இந்த சிரமதானக்குழு 2 வாரங்கள் வவுனிக்குளம் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு நிதியை சேகரிப்பார்கள்.

# திருத்த வேலைகள் ஆரம்பம்

(வேலணை)

புங்குடுதீவையும் வேலணையையும் இணைக்கும் பாலமாகிய அம்பலவாணர் தாம்போதி திருத்தவேலைகள் நடைபெற்றுவருகின்றன. இத் திருத்தவேலையைப் பெருந்தெருத் திணைக்களமே செய்துவருகின்றது.

# அந்தோனியார் கல்லூரி வெற்றி

(ஊரதீவு)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 4-1 கோல்களினால் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வெற்றிபெற்றது. இப்போட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

காங்கேசன்துறை சிமெந்து ஆலையில்

# களவுபோன பைப்புகள் நிலத்திற்கடியிலிருந்துமீட்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வேலைகளுக்காக சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 40,000 ரூபா பெறுமதியான 80 உருக்கு பைப்புகள் காணாமற்போனது தொடர்பாக செய்யப்பட்ட புகாரில் யாழ் குற்றத்தடுப்புப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த சார்ஜன்ட் ஜி. மாசிலாமணி, சார்ஜன்ட் வி. எல். வேல், பொலிஸ் கான்ஸ்டபிள்களான எஸ். நவரட்ணம், எஸ். ஜோர்ஜ் ஆகியோர் புலன் விசாரணையை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறையில் உள்ள மாங்கொல்லை என்ற கிராமத்தைச் சேர்ந்த பொன்னம்மா என்பவரின் வீட்டைச் சந்தேகத்தில் பொலிசார் சோதனையிட்டபோது 20 பைப்புகள் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்து மீட்டனர்.

இதைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் கு. சந்திரபோஸ், ஆ. மரியாபிள்ளை ஆகியோரை பொலிசார் கைது செய்தனர்.

யாழ். குற்றத்தடுப்புப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த பொலிசார் மேற்கொண்டு புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கு)

# "3,62,500 தமிழ் மக்கள் குறைபாடுள்ளவர்கள்"

(சாவகச்சேரி)

"நமது சமுதாயத்தில் உள்ள மக்களில் அனேகருக்கும் ஏதோ ஒருவகையில் ஒரு குறைபாடு இருக்கத்தான் செய்யும். இக்குறைபாடுகளிற் சில கண்ணுக்குத் தெரியக் கூடியது. சில குறைபாடுகள் கண்பார்வைக்குத் தெரியாதனவாக இருக்கும். தமிழ் பேசும் மக்களிடையே எங்கள் நாட்டில் ஏறக்குறைய 362500 பேர் குறைபாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய குறைபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கு ஆகவேண்டிய உதவி செய்வதே எமது இலட்சியமாக அமையவேண்டும். அகில உலகத்திலே ஐக்கிய நாடுகள் சபையே வலுவிழந்தோர் ஆண்டாக இவ்வாண்டை பிரகடனப்படுத்தி வலுவிழந்தோருக்காகப் பாடுபடுமளவிற்கு எமது கல்வி இலாகா வலுவிழந்தவர்களுடைய கல்வியில் அதிக கவனம் எடுக்காமலிருப்பது மிகுந்த மனவருத்தமான காரியம்". சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடந்த வலுவிழந்தோர் கருத்தரங்கில் உரையாற்றிய கைதடி கட்புலன், செவிப்புலனிழந்தோர் பாடசாலை உப அதிபர் ஆர். கோபாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாரண உதவி ஆணையாளரும், ஆசிரியருமாகிய வி. ரி. நடராசா தலைமையில் நடந்த கருத்தரங்கில் கோபாலகிருஷ்ணன் மேலும் குறிப்பிட்டதாவது

சர்வதேச ஆராய்ச்சியின் மூலம் நாம் எடுத்த புள்ளிவிபரப்படி வலுவிழந்த 3,62500 பேர்களில் அவசியமாகச் சிகிச்சை அளித்துப் புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டியவர்கள் 72,500 பேர் இருக்கிறார்கள். 15 வயதிற்குட்பட்ட குறைபாடுடையோர் 43500 பேர் இருக்கிறார்கள். அதில் 4000 பிள்ளைகளைப் பாடசாலைகளிலே பின்வாங்கிலே ஒதுக்கி விடுகிறார்கள்.

இன்னும் போதிய உடல் வளர்ச்சி இல்லாத குறைபாடுடையவர்கள் பெரிய தலை, பெரியகால், பெரிய கை உள்ளவர்களும் எமது சமூகத்தில் உள்ளனர். இவர்களுக்கும் ஆகவேண்டிய உதவி செய்யவேண்டும்.

## பேசமுடியாத பிள்ளைகள்

சிறு குழந்தைகள் மொழியை மற்றவர்களிடமிருந்து கேட்டுத்தான் பேசப்பழகுகின்றன. வாய்பேசாதபிள்ளைகள் இவர்களாகவே என நினைக்கிறோம். ஆனால் அப்படியல்ல. பிள்ளைகள் 5வயதில் 2000 சொற்களையும் 7, 8வயதில் 5000 சொற்களையும் கற்றுவிடுகிறது. ஆனால் செவிப்புலனில்லாத பிள்ளை 10 சொற்களைத்தானும் கற்க முடியாது.

பிள்ளைகளுக்குக் குறைபாடுகள் தாயிடமிருந்து வருகின்றன. போஷாக்குக் குறைவினாலும் இவற்றை எல்லாம் நாம் கவனித்து ஆகவேண்டிய உதவி செய்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவேண்டும். என்றார் உடுவில் வலுவிழந்தோர் பாடசாலை ஆசிரியை வண. மிஸ் ஹெலன் மூளைவளர்ச்சிக் குறைபாடுள்ள பிள்ளைகள் பற்றிக் குறிப்பிடுகையில்

இப்பிள்ளைகள் யோசிக்க, தானே இயங்கமுடியாத பிள்ளைகளை சமூகம் ஒதுக்கிவிடுகிறது. மூளை எமக்கு எவ்வளவு அத்தியாவசியம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இது எப்படிவந்தது என்பதைச் சிந்திக்கவேண்டும். தாய் கெற்பமாயிருக்கும் போது ஏற்படும் பெற்றோர் ஒற்றுமையின்மை நிலத்தில் விழுதல் போன்ற நிலைகளினும் ஆயுதமூலம் பிரசவிக்கும் சில பிள்ளைகளுக்கும் மூளைதாக்கப்படும். ஆகவே இவற்றை அவதானித்து இக்குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்றார்.

சட்டத்தரணி எஸ். மகாதேவா உட்படப்பலர் உரையாற்றினர்.

# "புன்னெறி நீக்கிநன்னெறியில் ஒழுகவைப்பது கந்தபுராணம்"

(கன்னாகம்)

"புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை நீக்கி மக்களை நன்னெறியில் ஒழுகவைப்பது கந்தபுராணம். கந்தபுராணம் சைவமக்களின் கலாச்சாரத்தை வளம்பபடுதில் பெருந்துணை புரிந்துள்ளது. ஆலயங்களிலும் மற்றும் பொதுஇடங்களிலும் கந்தபுராண படனம் நடைபெறவேண்டும். கந்தபுராணத்தை மெய்யன்போடு படிப்பவர்களுக்கு வாழ்க்கையில் சால சிறப்புகளும் உண்டாகும் என்று கச்சியப்பசிவாசாரியார் கூறியுள்ளார். கடந்த ஐம்பத்தைந்து வருடங்களாகப் பண்டிதர் கா. நமசிவாயம்பிள்ளை யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு ஆலயங்களிலும் விரிவானமுறையிலே பயன் சொல்லித் தொண்டாற்றியுள்ளார்". என்று சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற கந்தபுராண விழாவிலே ஆலய பிரதம குருக்கள் ச. வரதராஜக் குருக்கள் பண்டிதரைப்பாராட்டிப் பேசும்போது குறிப்பிட்டார். விழாவிற்கு மயிலணி கந்தசுவாமி கோயில் திருப்பணிச் சபைத்தலைவர் திரு. கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை தலைமை வகித்தார்.

"ஆறுமுகநாவலர் காலம் முதல் கந்தபுராண படனம் சிறப்பாக நடைபெறுகிறது. கந்தபுராணம் எல்லா வீடுகளிலும் இருக்கவேண்டிய நூலாகும். ஆறுமுகநாவலருடைய கந்தபுராண வசனத்தை எல்லோரும் படிப்பதவசியம்" என்று பண்டிதர் கா. நமசிவாயம் கூறி, நன்றியையும் தெரிவித்துக்கொண்டார். (அ)

## வேலை தேடி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் தனது வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார் அந்த நோய்க்கு நிதி அமைச்சர் சிபார்சு செய்த மருந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய தல்ல.

"1979ம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட உரையின்போது "இருளின் நடுவே அடி வானில் ஒரு மெல்லிய ஒளி தெரிவதாக நிதியமைச்சர் குறிப்பிட்டிருந்தார்

"எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் அவர் அதுபற்றிக் குறிப்பிடுகையில் "அது உதயமாகின்ற ஒளியா அல்லது அஸ்தமமாகின்ற ஒளியாஎன்பது தெரியவில்லை" என்றார் இப்பொழுது அது என்ன ஒளி என்று தெரிகிறது. நாட்டின் பொருளாதார நிலையில் தற்போது பூரண இருள் சூழ்ந்துவிட்டது.

1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டபோது திரு எச் ஏ. பி. சந்திரசேகரா "இந்த அரசியலமைப்பு திருப்திகரமாக அமையாவிட்டால் யாழ்ப்பாணம் அதிர்ஷ்டமுள்ளதாக மாறும்" என்றார்

தற்போது எமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் எதுவும் புதிதல்ல கனடா வேல்ஸ், ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளிலும் பிரச்னைகள் உள்ளன.

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படவேண்டும் அபிவிருத்திசபைகள் மூலம் பல பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் இந்த வரவுசெலவுத்திட்டத்தில் அபிவிருத்தி சபைகளுக்கென ஐந்து சதம் தானும் ஒதுக்கப்படவில்லை. என்றார். (ம-வெ)

## நீர்ப்பறவைகளுக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கவரும் உல்லாசப் பிரயாணிகள் மூலம் இலங்கைக்கு பெருந்தொகையான அந்நியச் செலவாணி கிடைக்கின்றது. ஆனால் எங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலே இப்படி ஒன்றும் அமைக்கப்படவில்லை. இதனால் இலங்கைக்குவரும் உல்லாசப் பிரயாணிகள் கொழும்பு, கண்டி. போன்ற இடங்களுக்குச்சென்றுவிட்டுத் திரும்புகிறார்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணம் என்னும் ஒரு நகரம் இருக்கிறதென்றே தெரியவில்லை. இக்குறையைநீக்க யாழ்ப்பாணத்தில் றீகல் தியேட்டருக்கு அருகாமையில் இருக்கும் புல்லுக்குளத்தை நீர்ப்பறவைகளின் குளமாக மாற்றும்படி எழுதியிருந்தார் கட்டுரையாளர்.

இந்தப்புல்லுக்குளம் மூடப்பட்டுக்கொண்டு வருகிறது. இதை உடனே யாழ். மாநகர முதல்வர் கவனிக்கவேண்டும். புல்லுக்குளத்தை நல்லமுறையில் திருத்தி பறவைகளுக்கு உறைவிடம் கொடுத்து யாழ். மாவட்டத்தையும் உல்லாசப் பிரயாணிகளின் பொழுதுபோக்கு இடமாகமாற்றுவது பற்றி யாழ். மாநகரசபை ஆலோசிக்கவேண்டும்

எஸ். அழகரத்தினம், இணுவில்.

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

## இப்படியும் நடக்கிறது

மூன்று ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான குடிமக்களின் கொலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவரும்; பெண்கள், ஆண்கள், குழந்தைகள் உட்பட 280 பேரை தனது கைகளினாலேயே கொலைசெய்தவருமான முன்னாள் பொலிஸ்காரர் காலெ ஜெகர் (69 வயது) என்பவருக்கு ஜெர்மன் ஜனநாயககுடியரசின் ஹேல் நகர நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஹிட்லரது பாஸிஸ ஆட்சியில் (1941—43) இவ்விதம் கொடுமைபுரிந்த மேற்படிப் பொலிஸ்காரருக்கு 'முப்பத்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் வழக்கு விசாரணை நடைபெற்று கடந்த வாரம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது!

—ஊடுருவி

# லயன்ஸ் கழக சேவை: யாழ். அபிவிருத்தி சபைத்தலைவர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

லயன்ஸ் கழகங்களின் மகத்தான சேவைகளுக்கு யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா பாராட்டுத் தெரிவித்தார்.

யாழ் லயன்ஸ் கழகத்தின் 8-வது ஆண்டு பூர்த்தி விழா யாழ் லயன்ஸ் கழகத்தலைவர் திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நேற்று நடைபெற்றபோதே மேற்கண்ட பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சொல்லளவில் நிற்காமல் செயலளவில் ஈடுபடுகிறார்கள் என்பதை பல இடங்களில் காணப்படும் லயன்ஸ் கழகச் சின்னங்கள் சுட்டிக்காட்டுவதாகவும் திரு. சு. நடராசா தெரிவித்தார்.

இவ்விழாவில் யாழ்மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ் மாவட்டத்திலுள்ள சகல லயன்ஸ் கழக தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

## 6 பெண்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்குமாறு உத்தரவிட்டார்,

உத்தியோகம் பார்க்கும் பெண்கள், பாடசாலை மாணவிகள்போல் இவர்கள் உடையணிந்து துர்நடத்தையில் ஈடுபடுவதாக பொலிசார் தெரிவித்தனர்.

பட்டப்பகலில் பாடசாலை மாணவிகள் போல் இவர்களும் நகரிலும், பஸ்நிலையங்களிலும் நடமாடுவதால் மாணவியரின் கல்வியும் நல்லொழுக்கமும் இவர்களால் பாதிக்கப்படும் என்று தெரிவித்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரான 6 இளம்பெண்களையும் மீண்டும் இருவாரம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## குடை யாருடையது?

கலட்டிச் சந்தியிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் பிரவுண் ரோட்டில் வயிரவர் கோயிலடியில் சிவசம்பு ஞானசுந்தரம் என்பவரால் குடையொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் கூறி பெற்றுக்கொள்ளலாம்

# மேற்கிந்திய கிரிக்கெட் குழு இலங்கையுடன் மோதும்

(கொழும்பு)

பிரபல கிரிக்கட் வீரர்களைக் கொண்ட மேற்கிந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழு இலங்கைக்கோஷ்டியை மூன்று டெஸ்ட் பந்தயங்களை விளையாட தமது நாட்டிற்கு வருமாறு அழைப்புவிடுத்துள்ளது.

பெப்ரவரி மாதம் மேற்படி கிரிக்கெட் டெஸ்ட் இடம் பெறவிருக்கின்றது.

கரீபியன் தீவுகளான லீவார்ட், விண்ட்வார்ட் தீவுகளிலேயே டெஸ்ட் போட்டிகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிரபல மேற்கிந்திய ஆட்டக்காரர்களான விவியன் ரிச்சர்ட்ஸ், ஆண்டி றொபேர்ட்ஸ் ஆகியோர் இத்தீவுகளைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

# மரண அறிவித்தல்

## திருமதி பஞ்சரத்தினம் இராசரத்தினம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி பஞ்சரத்தினம் இராசரத்தினம் (பொட்டம்மா) காலமானார். இவர் காலம் சென்ற R. N இராசரத்தினத்தின் மனைவியாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று 17-11-81 மாலை 3மணிக்கு கோண்டாவில் 'ஆனந்தபதி' இல்லத்தில் இருந்து கோண்டாவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 1477

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி. 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 17-ந்திகதி அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது, Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100286/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889. 8186.